1981 பிப்ரவரி 28]

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு எல்லா கிராமங்களுக்கும் மினி பஸ்கள் விட ஆவன செய்யும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தற்பொழுது, பேருந்துகளுக்கு அனுமதி கொடுப்பதை நிறுத்தி வைக்குமாறு அரசு உத்தரவிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவைத் தளர்த்தி விட்டு, மீண்டும் உடனடியாக பேருந்துகளுக்கு பர்மிட் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் ஆட்சிக் காலத்திலே இப்படி பேருந்துகளுக்கு அனுமதி கொடுப்பதைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். இருந்தாலும், இப்பொழுது தற்காலிக உரிமம் வழங்குவதன் மூலம் நாங்கள் அதைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதைப் பற்றி பரிசீலனை செய்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

லாரிகளில் மக்கள் பயணம் செய்வதைத் தடை செய்தல்.

*வினா எண் 319—திரு. இல. பலராமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லாரிகளில் பொது மக்கள் ஏற்றுவதை தடை செய்யும் சட்டத்தினை தளர்த்தும் உத்தேசம் அரசு ஆலோசனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளர்த்துகின்ற எண்ணம் அரசுக்கு இல்லாவிட்டாலும் லாரிகளிலே ஆட்கள் போவது, ஏற்றிச் செல்வது, என்பது இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒன்றில் அதைக் கடுமையாக அமுல்படுத்த வேண்டும். இல்லையென்றால், தளர்த்த வேண்டும். இரண்டுக்கும் இடையிலே சில கூட்டங்களுக்குச் செல்லும்போது, அதை அனுமதிப்பதும், சில நேரங்களில் அதைக் கடுமையாகத் தடுப்பதாலும் சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே, அரசாங்கம் அதிலே திட்டவட்டமாக முடிவெடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மறைமுகமாக ஏதோ வேறு கருத்தைச் சொல்வதைப் போல் தெரிகிறது. எங்களைப் பொறுத்தவரை, லாரி

களிலே ஆட்களை ஏற்றிச் செல்லக் கூடாது என்றுதான் நாங்கள் கடுமையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். காரணம், அதிலே விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதுதானேயொழிய, வேறு எந்த உள் நோக்கமும் இல்லை. லாரிகளிலே போகின்றபொழுது விபத்துக்கள் ஏற்படுகின்ற காரணத்தால், நிறைய மக்கள் இறந்து விடுகிறார்கள் என்ற காரணத்தால், அதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். எங்கே, எந்தக் கூட்டத்திற்கு லாரிகள் சென்றாலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இங்கே திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, லாரிகளிலே ஏற்றிச்சென்றால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதால்தான் தடை செய்யப்படுகிறது என்று கனம் அமைச்சர் கூறினார். அதை விட, இப்பொழுது பஸ்ஸிலே பயணம் செய்தாலும் சரி, ரயிலிலே பயணம் செய்தாலும், டிரிபிள் ஆக்சிடெண்ட் ஏற்பட்டு, ஜனங்கள் செத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக, ரயில் பிரயாணத்தையே தடை செய்வது, பஸ் பிரயாணத்தையே தடை செய்வது என்பது சரியாகாது. ஆகவே, நான் அமைச்சரிடம் சொல்ல விரும்புவதும், கேட்டுக் கொள்ள விரும்புவதும், இந்தத் தடையானது அரசியல் பாகுபாடு குற்றச்சாட்டுக்கு இடம் அளிக்கிறது; போலீஸ் மிஸ்யூஸ் பண்ணுவதற்கும் இடம் அளிக்கிறது. ஆகவேதான் முந்தைய சட்டசபையில், 'ப்ரீ டிஸ்ஸால்வ்ட்' சட்டசபையிலே, முதலமைச்சர் அவர்கள் அதை மறுபரிசிலனை செய்கிறேன் என்று அஷ்யூரன்ஸ் கொடுத்திருக்கிறார். ஆகவே, அந்தத் தடையை தயவு செய்து நீக்குவீர்களா? அதற்கு உடனடி முடிவு எடுப்பீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்குக் கூட அரசாங்கம் அனுமதித்துத்தான் நடத்திக் கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கிறபொழுது, ஆளுங்கட்சிக்காரர்கள் என்றால் அனுமதி வழங்குகிறார்கள், மற்றவர்களுக்கு அனுமதி தருவதில்லையென்று சொல்கிறார்கள். அது சரியல்ல. அரசாங்கத்தைப்பொறுத்தவரை, லாரிகளிலே போகின்றபொழுது, விபத்துக்கள் ஏற்படுகின்ற காரணத்தால்தான் அதைத் தடுத்துக் கொண்டு வந்திருக்கிறோம்.

இப்பொழுது எங்களுடைய எண்ணம், அதைத் தளர்த்துவோமேயானால், லாரிகள் முழுவதும் அதற்காகப் பயன்படுத்தப்பட்டு விடும். எனவே, எந்த எந்த வேலைகளுக்கு, எந்த எந்த வாகனங்களைப் பயன்படுத்த வேண்டுமோ, அவைகளுக்கு அவற்றைப் பயன்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான், இந்த நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்போது அந்த கட்டுப்பாட்டை தளர்த்தக் கூடிய எண்ணம் எங்களுக்கு இல்லை.

1981 பிப்ரவரி 28]

[முற்பகல் 10-10]

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல சந்தர்ப்பங்களில் பல இடங்களில் பஸ்கள் கிடைக்காமல் தவிர்க்க முடியாமல் லாரிகளில் ஏறிச் செல்ல வேண்டிய சூழ்நிலை பயணிகளுக்கு ஏற்படுகிறது. அந்தமாதிரி சூழ்நிலையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அவர்கள் லாரிகளில் செல்ல அனுமதி அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தவிர்க்க முடியாத காரணத்தால் பயன்படுத்துவது என்று சொன்னால், தவிர்க்க முடியாத காரணத்தால் குற்றம் செய்கிறோம் என்று சொல்வதுபோலாகிவிடும். இதற்காக போக்குவரத்து வசதியை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு இந்த வசதிகள் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். இன்னும் சொல்லப்போனால் இந்தப் போக்குவரத்து வசதிகளை அதிகப்படுத்திய தன்பேரில் போக்குவரத்துக் கழகங்களில் நஷ்டம் ஏற்படுகிறது என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அதுபோன்று இதையும் கவனத்தில் வைத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, லாரிகளில் பொதுமக்கள் பயணம் செய்யக்கூடாது, செய்யத் தேவையில்லை என்பது பொதுவான கருத்து. அதனாலே விபத்துக்கள் ஏற்படும் என்று சொல்வது அரசாங்கத்தினுடைய விளக்கம். ஆனால் சில நேரங்களில் சில நிகழ்ச்சிகளுக்கு ஏராளமான லாரிகளில் பொதுமக்கள் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். சில நேரங்களில் சில நிகழ்ச்சிகளில், அது எந்தக் கட்சி நிகழ்ச்சி என்றில்லை, அவர்கள் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி வேற்றுமை காட்டப்படுவது போன்ற நிலைமை அரசாங்கத் துறையில் இருக்கிறபோது, யார் செல்வதாக இருந்தாலும் அனுமதி பெற வேண்டும் என்று முறையை வைக்க அரசு முன் வருமா? இல்லை என்றால், இப்படிப்பட்ட பொது நிகழ்ச்சிகள் நடைபெறுகிறபோது லாரிகளில் செல்பவர்களை தடுப்பதில்லை என்றாவது அரசாங்கம் ஒத்துக் கொள்ள முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, லாரிகளில் மக்களை ஏற்றிச்செல்லுகிறபோது அதிகாரிகள் பார்த்தால் தடுத்து நிறுத்துகிறார்கள். எந்தக் கூட்டத்திற்குப் போனாலும் அதைத் தடுத்து நிறுத்துகிறார்கள். அதிலே வேற்றுமை காட்டப்படுகிறது என்று சொன்னால், அதை எங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் நிச்சயமாக நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம். அனுமதி வழங்குகிறோம் என்று சொன்னால், மீண்டும் அதை அனுமதிக்கிறோம் என்றுதான் பொருள்.

எனவே அவருடைய கருத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றால், அதை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்றால், ஸ்பேர் பஸ்கள் அதிகமாக வைத்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கியாக வேண்டும். அப்போதுதான் லாரிகளுக்கு பொது மக்கள் போக மாட்டார்கள்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் பயணம் செய்ய பஸ் வசதி போதிய அளவுக்கு இருந்தும், லாரிகளில் பொதுமக்கள் ஏறுவதற்கு என்ன காரணம் என்று இந்த அரசு கண்டறியுமா? அதனைத் தவிர்ப்பதற்கு ஆக்கபூர்வமான பணிகளை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகள் நிறைய இருந்தும், ஸ்பேர் பஸ்கள் அதிகம் இல்லாத காரணத்தினால் இப்படி லாரிகளில் போகக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது என்று சொல்லுகிறார்கள். இப்போது இருக்கிற கட்டண விகிதத்தில் ஸ்பேர் பஸ்களை வைத்து ஓட்டுவது என்பது சிரமமாக இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இங்கே அதிகமான லாரிகளைப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். எனவே அதற்கு நடவடிக்கை எடுத்து ஸ்பேர் பஸ்களை வைத்திருப்பது கட்டுப்படியாகின்ற அளவுக்கு சூழ்நிலை ஏற்படுத்தினால், நிச்சயமாக இந்த நிலை ஏற்படாது.

திரு. ச. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, திருமணம் மற்றும் விழாக் காலங்களில் பேருந்துகளில் இடம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இது போன்ற நேரங்களில் கிராமப் புறத்திலே இருக்கின்ற மக்கள் லாரிகளைப் பயன்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட சமயங்களில் லாரிகளைப் பயன்படுத்த அரசு விசேஷமான அனுமதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, விசேஷத்துக்கு என்று அனுமதித்தால் ஒவ்வொரு முறையும் விசேஷத்துக்கு என்று கேட்கக்கூடிய நிலைமை ஏற்படும். வேண்டுமானால் நீங்கள் சொல்லிய கருத்துக்களை மனதிலே வைத்துக் கொண்டு அவர்களுக்கு வேறு முறையிலே பஸ்கள் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட முடியுமா என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்கிறோம்.